

விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தொல்.திருமாவளவன் அவர்களின் சிற்றன்னை செல்லம்மாள் அவர்களின் மறைவிற்கு கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர், முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ. நேரில் சென்று அஞ்சலி செலுத்தி திருமாவளவனுக்கு ஆறுதல் கூறினார். உடன் விக்கிரவாண்டி சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் சிவா, மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயச்சந்திரன், ஒன்றியச் செயலாளர்கள் கல்பட்டு வி.இராஜா, வேம்பி.ரவி, ஜெ.ஜெயபால் ஆகியோர் உடனிருந்தனர்.



சிவகங்கையில் காஞ்சிரங்கால் ஊராட்சி மன்ற தலைவர் முன்னாள் மாவட்ட கழக துணைச் செயலாளர் கே.எஸ்.எம்.மணிமுத்துவின் முதலாவது ஆண்டு நினைவு நாளில் அவரது திருவுருவப்படத்திற்கு கூட்டுறவுத்துறை அமைச்சர் மாவட்ட கழக செயலாளர் கே.ஆர். பெரியகருப்பன் மலர் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார். முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், திருமதி மலர்விழி மணிமுத்து, மகள்கள் ரெசினா பானு, நமனப்ரியா, மாவட்ட கழக துணைச் செயலாளர்கள் த.சேங்கைமாறன், திருமதி ஜோன்ஸ் ருசோ, நகர் கழக செயலாளர் சி.எம்.துரை.ஆனந்த் ஆகியோர் மரியாதை செலுத்தினார்கள்.

### திருவண்ணாமலை மாநகர தி.மு.க. சார்பில்,

# கலைஞர் 102வது பிறந்த நாள் விழா மாபெரும் பொதுக்கூட்டம்!

## நலஉதவிகள் வழங்கி, பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு சிறப்புரை!

திருவண்ணாமலை, ஆக. 19–

திருவண்ணாமலை மாநகர தி.மு.க. சார்பில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாள் விழா நடைபெறவுள்ளது. விழாவில் நலஉதவிகள் வழங்கி பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு சிறப்புரையாற்றுகிறார்.

21.08.2025 வியாழக் கிழமை மாலை 6.00 மணிக்கு, திருவண்ணாமலை, கீழ்நாத்தூர் முத்தாலம்மன் கோவில் அருகில், திருவண்ணாமலை மாநகர தி.மு.க. சார்பில், முத்தமிழ றிஞர் கலைஞரின் 102வது பிறந்த நாள் விழா பொதுக்கூட்டம் நடைபெறவுள்ளது. பொதுக்கூட்டத்திற்கு மாநகரச் செயலாளர் ப.கார்த்திவேல்மாறன் தலைமை வகிக்கிறார்.

ஒன்றிய செயலாளர்கள் மெய்யூர் சந்திரன், த.ரமணன், பெ.கோவிந்தன், மாநகர பகுதி செயலாளர்கள் சு.விஜி(எ)விஜயராஜ், அ.கோவிந்தன், ந.சீனு வாசன், குட்டி க.புகழேந்தி, பா.ஷெரீப் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மாநகர பகுதி செயலாளர் சி.சண்முகம் அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறார்.

பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு, பயனாளிகளுக்கு நலஉதவிகள் வழங்கி பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் சிறப்புரையாற்றுகிறார்.

பொதுக் கூட்டத்தில் சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, மாநில மருத்துவ அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், நாடாளுமன்ற உறுப்பினர் சி.என். அண்ணாதுரை, மாவட்ட அவைத் தலைவர் கோ.கண்ணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன், மாநில பொறியாளர் அணி செயலாளர் கு.கருணாநிதி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொன்.முத்து, சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, பெ.சு.தி.சரவணன், மாவட்ட பொருளாளர் எஸ்.பன்னீர்செல்வம், மாவட்ட துணை செயலாளர்கள் பிரியா ப.விஜயரங்கன், விஜயலட்சுமி ரமேஷ், தொ.மு.ச., மாநில துணை செயலாளர் க.சௌந்தரராசன், செய்தி தொடர்பு இணைச் செயலாளர் சிவ. ஜெயராஜ்,

மாவட்ட அமைப்பாளர்கள் டி.வி. எம்.நேரு, காலேஜ் கு.ரவி, ஜெ.மெய்கண்டன், ஏ.ஏ.ஆறுமுகம், ப.அண்ணாமலை, மங்கலம் பிரபாகரன், பொன்.தனுசு, எச்.சாதிக்பாட்சா, கு. கணேஷ், சி. ராம்காந்த், பச்சையம்மன் எஸ்.முத்து, இரா.கார்த்திகேயன், டாக்டர்.பிரவீன்ஸ்ரீ தரன், சி.பி.பாலமுரளிகிருஷ்ணா, ஏ.டபள்யு.சர்தார் காசீம், எஸ்.டி.ஆர்.எஸ்.பாபு, பி. கே.ஏ.அருண், எல்.ஐ.சி.து.வேலு, கற்பகம்சரவணன், உ.நித்யா, தொ.மு.ச. கவுன்சில் செயலாளர் இரா.ஆறுமுகம்,

ஒன்றிய செயலாளர்கள் அ.சிவக்குமார், மு.பன்னீர் செல்வம், வி.பி. அண்ணாமலை, ஆராஞ்சி ஆறுமுகம், சி.சுந்தபாண்டியன், ப.கேசவன், கோ.ரமேஷ், சி.மாரிமுத்து, எஸ்.சிவசேமன், க. சுப்பிரமணி, இரா.ராஜேந்திரன், ஆர்.வி.சேகர், கி.ஆறுமுகம், பா.ராமஜெயம், த.செந்தில்குமார், அ. ஏழுமலை, த. மனோகரன், செங்கம் நகரச் செயலாளர் மு.அன்பழகன்.

பொதுக்குழு உறுப்பினர்கள் நா.பழனி, து.கென்னடி, கு.பாலசுப்பிரமணி, அ.தண்டபாணி, க.பிரபாகரன், கா.சு.இளங்கோவன், அன்பரசி ராஜசேகர்,

பேரூர் செயலாளர்கள் சி.கே. அன்பு, பா.முருகையன், எம்.சீனுவாசன், மாநகர மேயர் நிர்மலா வேல்மாறன், துணை மேயர் சு. ராஜாங்கம், பேரூராட்சி மன்ற தலைவர்கள் கோ.சரவணன், கௌரி நடராஜ், செல்வபாரதி மனோஜ்குமார், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் எஸ்.கண்ணதாசன், கோ.ராஜசேகர், எம்.ரமேஷ், எஸ்.சதீஷ்குமார், டி.தீலிப்குமார், மாநகர நிர்வாகிகள் மு.கருணாமூர்த்தி, வட்டி அருணாச்சலம், ஜீவரேகா விஜயராஜ், இல.குணசேகரன், அ.கண்ணன், கோல்டு எஸ். பிரபு, ஹக்கிம் சேட் மற்றும் மாவட்ட துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், நகர அணிகளின் நிர்வாகிகள், கிளைக் கழக செயலாளர்கள், பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் உட்பட பலர் கலந்து கொள்ள உள்ளனர்.

நிறைவாக வட்ட செயலாளர்கள் கு.குமார், பி.ஆர்.நாகராஜ் நன்றி கூறுகின்ற னர். முன்னதாக மாவட்ட திமுக இசைக்குழு அம்பேத் குழுவினரின் இசை நிகழ்ச்சி நடைபெறவுள்ளது.

### திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க. சார்பில்

# முரசொலிமாறன் 92வது பிறந்தநாள் விழா!

## சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி மாலை அணிவித்து மரியாதை!

திருவண்ணாமலை, ஆக.19-

திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க. சார்பில், முன்னாள் ஒன்றிய அமைச்சரும், திராவிட இயக்க தத்துவ பேராசானுமான முரசொலி மாறன் அவர்களின் 92வது பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது. அவரது திருவுருவப் படத்திற்கு சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். கழக முன்னோடிகள் மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

17.08.2025 ஞாயிற்றுக் கிழமை காலை 10.30 மணிக்கு, திருவண்ணாமலை, திருக்கோவிலூர் ரோடு, சாரோனில் உள்ள மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் திராவிட இயக்க தத்துவ பேராசான் முரசொலி மாறன் அவர்களின் 92வது பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது.

முரசொலிமாறன் அவர்களின் திருவுருவ படத்திற்கு சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி அவர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தி இனிப்புகள் வழங்கினார்.

தலைமை செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன், மாவட்ட பொருளாளர் எஸ்.பன்னீர்செல்வம், மாநகர செயலாளர் ப.கார்த்திவேல்மாறன் மாவட்ட துணைச் செயலாளர் ப்ரியா விஜயரங்கன் மற்றும் கழக முன்னோடிகள் மலர்தூவி மரியாதை செலுத்தினர்.

பிறந்த நாள் விழாவில் மாவட்ட அமைப்பாளர்கள் டி.வி.எம்.நேரு, காலேஜ் கு.ரவி, ஏ.ஏ.ஆறுமுகம், எஸ்.டி.ஆர்.பாபு, பி.கே.ஏ. அருண், ஒன்றிய செயலாளர் மெய்யூர் சந்திரன் பகுதி பொறுப்பாளர் ந.சீனுவாசன் நகர அமைப்பாளர்கள் குணாளன், ஆ.மோகன்ராஜ், வழக்கறிஞர்கள் டி.எம்.கதிரவன், ஷாகுல் அமீது, மாவட்ட துணை அமைப்பாளர்கள் டீகடை சீனுவாசன், கோ.தனபதி, ஏ.எம்.பாஷா, எஸ்.சமயராஜ், பா.முர்பத், ஆ.தே. முருகையன், எஸ்.பாபா ஜான், பாதுஷா, ராயல் தியாகு வ.சம்பந்தம், காசிநாதன், தொ.மு.ச.நடராஜன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.





கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்புக்கு இணங்க கழக இளைஞரணி செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆலோசனையின் படி மதுரை வடக்கு மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணியின் அண்ணா அறிவக கணினி கட்டுப்பாட்டு அறையினை வடக்கு மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி திறந்து வைத்து பணிகள் குறித்து ஆய்வு செய்தார். உடன் தகவல் தொழில்நுட்ப அணி மாநில துணைச் செயலாளர் சுரேஷ் செல்வராஜ், இளைஞர் அணி மாநில துணைச் செயலாளர் ஜி.பி.ராஜா, மண்டல பொறுப்பாளர் பாச பிரபு, வடக்கு மாவட்ட அமைப்பாளர் அண்ணாமலை, மாநில தகவல் தொழில்நுட்ப அணி மதுரை பாலா, பொறியாளர் அணி மாநில துணைச் செயலாளர் கலை கார்த்திகேயன், பகுதிச் செயலாளர்கள் சசிக்குமார், கௌரிசங்கர் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், கழகத்தினர் மற்றும் தகவல் தொழில்நுட்ப அணியினர் பங்கேற்றனர்.

# பா.ஜ.க.வின் துணை ஜனாதிபதி வேட்பாளராக சி.பி.ராதாகிருஷ்ணன் அறிவிப்பு!



புதுடெல்லி, ஆக.19-

துணை ஜனாதிபதியாக இருந்த ஜெக்தீப் தன்கர், உடல்நிலையை காரணம் காட்டி ராஜினாமா செய்தார். இதனையடுத்து புதிய துணை ஜனாதிபதியை தேர்வு செய்ய வரும் செப்டம்பர் மாதம் 9 ஆம்தேதி தேர்தல் நடைபெற உள்ளது. அன்றைய தினமே ஓட்டு எண்ணிக்கை நடைபெற உள்ளது. இதற்கான வேட்புமனு தாக்கல் துவங்கி நடந்துவருகிறது. ஆகஸ்ட் 21ம் தேதி கடைசி நாள் ஆகும்.இந்தப் பதவிக்கு யார் போட்டியிடுவார்கள் என்பது குறித்து ஆளுங்கட்சி மற்றும் எதிர்க் கட்சிகள் அறிவிப்பு வெளியாகாமல் இருந்தது.

இந்நிலையில், மத்தியில் ஆளும் பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் யாரை வேட்பாளராக நிறுத்துவது என்பது குறித்து முடிவு எடுக்க நேற்று முன்தினம் நாடாளுமன்றக் குழு கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் துணை ஜனாதிபதி வேட்பாளராக மகாராஷ்டிர கவர்னராக உள்ள சி.பி.ராதாகிருஷ்ணனை நிறுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தியா கூட்டணி சார்பிலும் வேட்பாளரை நிறுத்த திட்டமிடப்பட்டு ள்ளதால், துணை ஜனாதிபதி தேர்தல் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. துணை ஜனாதிபதி தேர்தலில் பாராளுமன்ற மக்களவை, மாநிலங்களவை எம்.பி.க்கள் அனைவரும் துணை ஜனாதிபதியைத் தேர்வு செய்ய வாக்களிப்பார்கள். இரு அவைகளிலும் பாரதிய ஜனதா தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு எதிர்க் கட்சிகளைவிட அதிக எம்.பி.க்கள் இருக்கிறார்கள். எனவே சி.பி.ராதாகிருஷ்ணன் எளிதில் வெற்றி பெற வாய்ப்புள்ளது. செப்டம்பர் 9-ஆம் தேதி இதற்கான அதிகாரப்பூர்வ அறிவிப்பைத் தலைமைத் தேர்தல் ஆணையம் வெளியிடும்.

சி.பி.ராதாகிருஷ்ணன் தமிழ்நாட்டில் கோவை மாவட்டத்தைச் சேர்ந்தவர் ஆவார். 1957ஆம் ஆண்டு அக்டோபர் 20ஆம் தேதி திருப்பூரில் பிறந்தவர் சி.பி. ராதாகிருஷ்ணன். முதலில் ஜனதா கட்சியில் இருந்த இவர், பின்னர் பா.ஜ.க.வில் இணைந்தார். 1998, 1999 ஆகிய மக்களவை தேர்தல்களில் கோவை மக்களவை தொகுதியில் போட்டியிட்டு வென்று எம்.பி. ஆனார். அதன்பிறகு போட்டியிட்ட மூன்று தேர்தல்களிலும் இரண்டாம் இடம் மட்டுமே கிடைத்தது.

2004 - 2007 காலகட்டத்தில் தமிழ்நாடு மாநில பாஜக தலைவராக பதவி வகித்தார். அப்போது கன்னியாகுமரி முதல் சென்னை வரை யாத்திரை மேற்கொண்டார். 2023ஆம் ஆண்டு பிப்ரவரியில் ஜார்க்கண்ட் மாநில கவர்னராக இவர் நியமிக்கப் பட்டார். ஓராண்டு கழித்து கடந்த ஆண்டு மகாராஷ்டிர மாநில ஆளுநராக மாற்றப் பட்டார்.

### வேலூர் தொகுதியில் உள்ள இரயில் நிலையங்களில்

# 5 முக்கிய இரயில்கள் நின்று செல்ல ஒப்புதல்!

## டி.எம்.கதிர் ஆனந்த் எம்.பி. தகவல்!



வேலூர், ஆக. 19 -

வேலூருக்கு உட்பட்ட பகுதிகளில் 5 இரயில்களை நிறுத்திச் செல்ல தென்னக ரயில்வே ஒப்புதல் அளித்துள்ளது என்று வேலூர் தொகுதி எம்.பி. டி.எம்.கதிர் ஆனந்த் தெரிவித்துள்ளார். அவரது அறிக்கை வருமாறு:

நமது வேலூர் தொகுதிக் குட்பட்ட மக்களிடம் பெறப்பட்ட கோரிக்கைகளின் அடிப்படையில் தென்னக இரயில்வே கூட்டங்கள் மற்றும் மக்களவையில் நான் கொடுத்த தொடர் அழுத்தத்தால் ஐந்து இரயில்கள் வேலூர் தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் நிறுத்திச் செல்ல ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

கீழ்க்காணும் அட்டவணைக்கு உட்பட்ட இரயில்கள் மற்றும் அதுசார்ந்த நிறுத்தம் பற்றிய விவரங்களை மக்கள் பார்வைக்கு பகிர்ந்துள்ளேன்.

இரயில் பெயர் புதிய நிறுத்தம் விவரம் வருமாறு:

12691 மற்றும் 12692 சென்ட்ரல் முதல் ஷிமோகா செல்லும் இரண்டு அதிவேக இரயில்கள் - ஆம்பூர்

13351 தன்பாத் முதல் ஆலப்புழா செல்லும் எக்ஸ்பிரஸ் இரயில் - குடியாத்தம் மற்றும் வாணியம்பாடி

16087 மற்றும் 16088 அரக்கோணம் முதல் சேலம் செல்லும் இரண்டு எக்ஸ்பிரஸ் இரயில்கள் - வளத்தூர்

16087 அரக்கோணம் முதல் சேலம் செல்லும் எக்ஸ்பிரஸ் இரயில் - மேல்பட்டி இந்த அறிவிப்பால், வேலூர் மக்களவைத் தொகுதிக்கு உட்பட்ட ஆம்பூர், வாணியம்பாடி உள்ளிட்ட வணிக பெருநகரங்களில் இருந்தும் பல்வேறு பகுதிகளில் இருந்து பணிக்கு செல்லும் தொழிலாளர்கள், விவசாயப் பெருமக்கள், பெண்கள், மூத்த குடிமக்கள் மற்றும் தொழில் முனைவோர் உள்ளிட்டவர்கள் முக்கிய நகரங்களுக்கு பயணிப்பதற்கு, மறைமுக பொருளாதார வளர்ச்சிக்கும் இது வித்திடும் என்றால் அது மிகையாகாது. இது உங்களின் குரலுக்கு கிடைத்த அங்கீகாரம். எனவே எனது மதிப்பிற்குரிய வேலூர் தொகுதி மக்களாகிய நீங்கள், தொடர்ந்து உங்களது தேவைகள் மற்றும் கோரிக்கைகளை முன்வையுங்கள். உங்களின் குரலாக தொடர்ந்து எதிரொலிப்பேன். வேலூரின் வளர்ச்சிக்கு ஒருசேர உழைப்போம்!

இவ்வாறு தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

### தஞ்சை மத்திய மாவட்டம், தஞ்சை மாநகரம்

# தஞ்சை எஸ்.சதாசிவம் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்



தஞ்சாவூர், ஆக.19 –

தஞ்சை மத்திய மாவட்டம், தஞ்சை மாநகரம் – மருத்துவக் கல்லூரி பகுதிச் செயலாளர் எஸ்.சதாசிவம் அவர்கள் (வயது 75) நேற்று முன்தினம் (17.08.2025) காலை 8.30 மணியளவில் உடல் நலக்குறைவால் மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

தகவல் அறிந்து, கழகத் தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள், அன்னாரது குடும்பத்தாருக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளார்.


மறைந்த சதாசிவம் தஞ்சை பகுதியில் இயங்கி வந்த பஞ்சாலை தொ.மு.ச தலைவராகவும், வட்டக் கழகச் செயலாளராகவும், நகர மன்ற உறுப்பினராகவும் பொறுப்பு வைத்தவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் மீதும், கழகத் தலைவர் அவர்கள் மீதும், இளந்தலைவர்மீதும் மாறாப் பற்றுக் கொண்டவர். கழகம் அறிவித்த அனைத்து ஆர்ப்பாட்டம் போராட்டங்களிலும் பங்கு பெற்று சிறை சென்றவர்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## விருத்தாசலம் எம். செல்வராஜ்

### ஆகஸ்ட் 19 (1997)



தந்தை பெரியார் தலைமையில் 1944ஆம் ஆண்டு திராவிடர் கழகத்தில் சேர்ந்தார். பின்னர், அண்ணா தலைமையில் தி.மு.க. தொடங்கிய காலம் முதல் தொடர்ந்து தொய்வில்லாமல் கழகப் பணியாற்றியவர்.

தென்னாற்காடு மாவட்டத்தில் கழகத்தை வளர்த்த முன்னோடிகளில் ஒருவராக விளங்கியவர். மாவட்டக் கழகச் செயலாளர், கழக அமைப்புச் செயலாளர், மூன்று முறை தணிக்கைக்குழு உறுப்பினர் உள்ளிட்ட பொறுப்புகளை வகித்தவர். தமிழக சட்டப்பேரவைக்கு மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றியவர்.

மக்கள் பிரச்சினைக்காக கழகம் நடத்திய பெரும்பாலான போராட்டங்களில் பங்கேற்றவர். விலைவாசி உயர்வு எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கேற்று சிறை சென்றவர்.

நெருக்கடிநிலை காலத்தில் மிசா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு ஓராண்டு காலம் சிறையில் இருந்தவர்.

கழகச் சார்பில் 1996ஆம் ஆண்டு நடைபெற்ற முப்பெரும் விழாவில் தலைவர் கலைஞர் அவர்கள் 'பெரியார் விருது' வழங்கி சிறப்பித்தார்கள்.

தலைமைக் கழகம்
தி.மு.க.